# வெற்றிடங்கள்

## தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழு

## (2016ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டது)

## பணிப்பாளர் நாயகம் / பிரதம நிறைவேற்று அதிகாரி (CEO) பதவி

இந்த நிறுவனத்தில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவிகளுக்காக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. ஆராய்ச்சி அதிகாரி (01 பதவி)**
**தகைமைகள் : வெளிவாரி / உள்வாரி விண்ணப்பதாரிகள்**

01. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் சமூகக் கல்வி, சட்டம் தொடர்பான விசேடமாணி பட்டம் ஒன்றை பெற்றிருத்தல்.

**அல்லது**

02. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் சமூகக் கல்வி, சட்டம் தொடர்பான பொதுப் பட்டத்துடன் ஆராய்ச்சி ரீதியிலான கல்வியைக் கொண்ட பட்டப் பின்படிப்பு டிப்ளோமா ஒன்றை பெற்றிருத்தல்.

**வயது:** 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். உள்ளவாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**சம்பள அளவு:** AR 1 - 2016 ரூபா (53,150 - 10 x 1,375 - 15 x 1,910 – 95,550)

**02. தகவல் தொழில்நுட்ப உதவியாளர் (01 பதவி)**
**தகைமைகள்:** வெளிவாரி / உள்வாரி விண்ணப்பதாரிகள்

மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப / தொழிற்கல்வி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழிற்திறனில் (NVQ) ஐந்தாம் (05) மட்டத்திற்குக் குறையாத தகவல் தொழில்நுட்பத் துறையில் தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

**வயது:** 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். உள்ளவாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**சம்பள அளவு:** MA 2-1 ரூபா (30,310 - 10 x 300 - 7 x 350 - 4 x 495 - 20 x 660 - 50,940)

**பொது நிபந்தனைகள்:**

1. அரசாங்கம் அல்லது கூட்டுத்தாபனம் / நியதிகள் சபை / ஆணைக்குழுவில் பணியாற்றுபவர்கள் தமது விண்ணப்பப் படிவத்தை நிறுவனத்தின் தலைவரின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.
2. தெரிவு செய்யப்படுபவர்கள் 1956ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க அரச மொழிக் கொள்கையின் கீழ் விதிக்கப்பட்டுள்ள சட்ட திட்டங்களுக்கு கட்டுப்படல் வேண்டும்.
3. நியமனம் பெறும் நாள் முதல் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு ஆணைக்குழுவினால் 12% மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு 3% பங்களிப்புத் தொகை செலுத்தப்படும்.
4. நியமனம் பெறுபவர்களுக்கு அக்ரஹார காப்புறுதித் திட்டத்தின் கீழ் மருத்துவக் காப்புறுதி காப்பீடு கிடைக்கும்.
5. அனைத்து பதவிகளுக்கும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் உரித்தாகும்.

விண்ணப்பதாரிகள் சான்றிதழ்களின் புகைப்படப் பிரதிகளுடன் சுயமாகத் தயாரித்துக் கொண்ட சுய தரவுகளை உள்ளடக்கிய விண்ணப்பப் படிவங்களை பதிவுத் தபாலில் 2025-02-24ஆம் திகதிக்கு முன் கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு அனுப்ப வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழு,**
**அறை இல. 203-204,**
**கட்டிட இலக்கம் 02,**
**பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம்,**
**கொழும்பு 07.**

**தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் மட்டும் நேர்முகத் தேர்விற்காக அழைக்கப்படுவர்.**